553

# பள்ளிக்கூடம்

தங்கநிழல்




திப்புகம்

ராஜகிர்

விலை 1

# முன்னுரை.

உள்ளக்களிப்பில் துள்ளி விளையாடும் ஓவியமே
பாட்டு
இதைத்தான் வள்ளுவர் அழகாக

"செவிக் குணவில்லாத போழ்து
சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்"

என்றார். ஆம்! பல அறிஞர்களின் கருத்தும் இதுவே தான். இசையைப் பருகிக்கொண்டிருப்பின் பசியெடுப்பதே தெரியவில்லை என்று கூறுகின்றனர்.

"பள்ளிக்கூடம்" எனும் இச்சிறிய இசை நூலை பள்ளி மாணவர்களுக்கு அன்புப் பரிசாக அளிக்கின்றேன். "படிடா தம்பி" எனும் புத்தகத்தை நான் இயற்றித்தந்தபோது பல்லாயிர மாணவர்கள் குதூகலமுடன் வாங்கிப் படித்து என்னை மகிழ்வித்தனர். அப்போது பலஆசிரியர்கள் கூறிய யோசனையின் விருந்தாக இப்போது "பள்ளிக்கூடம்" மலர்ந்தது. மாணவ உலகுக்கு இன்னும் பன்னூல்கள் தர காத்திருக்கும்,

உங்கள்,

**தங்கநிழல்.**

553

# பள்ளிக்கூடம்

ஆசிரியர்:
"தங்க நிழல்"

ஜைனப் பதிப்பகம்
இராஜகிரி. :: (தஞ்சை.)

முதற் பதிப்பு:
1000 பிரதிகள்.
25—3—53

திருத்திய
2-ம் பதிப்பு:
5000 பிரதிகள்.
1—8—53



ஜைனப்வெளியீடு 2.

பூரண உரிமையும்
ஜைனப்
பதிப்பகத்துக்கு.

# நோக்கம்!

ஆசிரியர் 'தங்கநிழல்' மாணவ உலகத்துக்கு நன்கு அறிமுகமானவர். சமீபத்தில் அவர்எழுதிய சில புத்தகங்கள் பள்ளி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டன. அவரால் எழுதப்பட்ட இச்சிறு நூல் மாணவர்களிடை நன்கு பரவ வேண்டும்; அவர்கள் உள்ளங்களைத் தொட வேண்டும் என்பது எங்கள்நோக்கம்.

பதிப்பகத்தார்,
இராஜகிரி. 1-8-53

# 1. பள்ளிக்கூடம்

படம்: வளையாபதி] [இசை: பள்ளிக்கூடம் பம்!பம்!

பள்ளிக்கூடம் வா! வா! வா! வா!
எப்போதும் தப்பாமலே! ஒப்பில்லா கல்வி ஓதிடவே!
(பள்)

[அநுபல்லவி]

ஆசிரியர் சொல் அமுதெனவே!
அனுதினம் தேடி அறிவுரை நாடி!
அழகு பண்ணோசை அன்புடன் பாடி
எப்போதும் தப்பாமலே! ஒப்பில்லா கல்வி ஓதிடவே!
(பள்)

[சரணம்]

அன்னைபிதா சொல்லைக் கேட்டு நடப்போம்—நம்
கண்ணைப்போன்ற கல்வியைக் கடைப்பிடிப்போம்
பண்புடன் கூடி விளையாடுவோம்—பல
பல தொழில் முறையைக் கற்றுத்தெளிவோம்

ஆசிரியர் சொல் அமுதெனவே
அனுதினம் தேடி அறிவுரை நாடி
அழகு பண்ணோசை அன்புடன் பாடி
எப்போதும் தப்பாமலே! ஒப்பில்லா கல்வி ஓதிடவே!
(பள்)

## 2. இறை வணக்கம்

(இசை: தீனதயாபரனே)

நீதி பரம்பொருளே!—நீ துணை (நீதி)

[அநுபல்லவி]

ஓதும் கலைகள் ஓங்கி வளர்ந்தே
உயர்வுடனே உண்மையோங்கியே வாழ (நீதி)

[சரணம்]

பொய்மை வஞ்சம் பொல்லா
சூதெல்லாமடிந்தே
புனித உள்ளமே புவியோர்க்கு திகழ்ந்தே
உய்யவே திருவழி செய்தருள்வாயே!
உறுதுணையே! நீதிபதியே! (நீதி)

---


### "பயங்கர உலகம்" வியாபாரிகளுக்கு

*ரிஜிஸ்டர் செலவு உட்பட*

| | |
|---|---|
| 50 பிரதிகள் | ரூ. 2–12—0 |
| 100 பிரதிகள் | ரூ. 5—0—0 |
| மேற்கொண்டு ஒவ்வொரு 100 பிரதிகளுக்கும் | ரூ. 4—8—0 |

50க்கு குறைந்த பிரதிகள் அனுப்புவதில்லை.

# 3. தோசைப் பாட்டி.

படம்: திகம்பரசாமியார்] [இசை: ஊசி பட்டாசே

ஊசி பட்டாசைக் கொளுத்தியே போட்டால்
ஓட்டம் பிடிப்பாள் பாட்டி பாட்டி
காசு கொடுத்தால் தோசை கொடுப்பாள்
கடன் தரமாட்டாள் பாட்டி பாட்டி (ஊ)

[அநுபல்லவி]

சுடச்சுட தோசை அடுக்கடுக்காக
சுட்டுத்தருவாள் பாட்டி
சோம்பேறிகளுக்கு முதுகிலே நாலு
தோசை கொடுப்பாள் கரண்டியினுலே
பேரனைத் தூக்கி மடியினில் வைத்து
தாலாட்டுவாள் பாட்டி பாட்டி
காரவடையும் மிளகாய் பொடியும்
கலந்தே தின்பாள் பாட்டி பாட்டி. (ஊ)

---


அடுத்த நூல் "தங்க நிழல்" தீட்டிய
கதையும் பாட்டும் (1, 2, 3ம் வகுப்புகளுக்கு)
கல்வி அல்லது சுந்தரம் (கட்டாயக்கல்வி நாடகம்)
சரோஜா (பெண் கல்வி நாடகம்)

# 4. மாம்பழம்

படம்: என் வீடு] [இசை: கண்மணியே

மாம்பழமே!.........ஏ.........மாம்பழமே!
மல்கோவா மாம்பழமே!—சுவை
மல்கோவா மாம்பழமே!
தேன் பழமே!......ஏ.......தேன்பழமே!
தித்திக்கும் திரு தேன் பழமே! (மா)

[அநுபல்லவி]

கன்னித் தமிழைப் போலினித்தே!
வண்ண வடிவிலே அமைந்தே
மின்னும் வான்மதி நிகர் பழமே! (மா)

முக்கனியிலே நீ! ஒன்ருனாய்!
பக்குவ தோட்டத்தில் பயிராளுய்!
பாருள்ளோர் உண்ணவே பணியாளுய்! (மா)

---

யூகன் & கலைவொளி (கொல்லாபுரம்) அளிக்கும்
"நிம்மதி" நாடக நாவல் விரைவில் மலரும்.

# 5. பூகோளம் III-std.

## காஷ்மீர் சிறுவன் அப்துல்லா

(இசை: தங்கையே பார்)

அப்துல்லா எனும் சிறுவன்
அழகு காஷ்மீரில் வசிப்போன்
அப்துல்லா வடிவழகன்
அங்குள்ளோ ரெல்லாம் அழகர் (அப்)

நம் நாட்டின் வடக்கிலுள்ள
நலமிகுந்த பிரதேசம்
அம்மம்ம! குளிர் அதிகம்
அதனல் கம்பளம் அணிவர் (அப்)

இமயமலை சரிவினிலே
எழில் பூக்கும் காஷ்மீரே!
"இமம்" என்ருல் பனி தம்பி!
இனிய பனி மலை தம்பி (அப்)

அப்துல்லா புத்திசாலி
அன்னை தந்தை சொல் கேட்பான்
தப்பாமல் விளையாடுவான்
தகுந்த படகேறிச் செல்வான் (அப்)

# 6. பூகோளம் III-std.

## பர்மா நாட்டு சிறுவன் பாமா.

படம்: இதயகீதம்] [இசை: ஆசைக்கிளியே

பர்மா நாட்டு சிறுவன் பாமா கதையைக்கேள்
— கதையைக்கேள்

பரண்போல் செய்த வீட்டில் வசிப்பான்
கதையைக்கேள்—கதையைக்கேள் (பர்)

[அநுபல்லவி]

நமது நாட்டிற்கும் கிழக்கே பர்மா
தேசம் உள்ளது
மலைகளதிகம் மழையுமிகுதியாக
பெய்யும் நாடது (பர்)

[சரணம்]

பாமா வீட்டைச் சுற்றி மரவேலிகள்
போடப்பட்டிருக்கும்
பயங்கர மிருகங்கள் காட்டில் அதிகம்
அதற்காகவே
எருமை மாட்டின் மீது ஏறி
எருமைகள் மேய்க்கச் செல்லுவான்
அரிய புத்த மதத்தைச் சார்ந்த பாமா
பக்தி கொள்ளுவான் (பர்)

# 7. பூகோளம் III-std

ப: வாழ்க்கை]தஞ்சை சிறுவன் முத்து[இ: டடடா

உலகெலாம் புகழ் நம் நாட்டிலே
உயர் சென்னை மாகாண ஜில்லாக்களில்
தஞ்சை ஜில்லா ஒன்றடா!
தம்பி முத்து வசிக்கிறான்!

அடடா! அடடா! அடடா! அடடா! அடடா
அடடா! ஆனந்தமாய் (தஞ்)

தஞ்சைக்கருகில் கிராமத்தில்
சந்தோஷமாக முத்துவும்
விளையாடுவான் பள்ளி செல்லுவான்
அன்னை பிதா சொல்லைக் கொள்ளுவான்
ஆசிரியர்க்கும் வணங்குவான்—விடியற்
காலையில் முத்து எழுவானே!
கடன்களையும் முடிப்பானே

அடடா! அடடா ... ... (தஞ்)

காவிரி ஓடும் தஞ்சையே!
செழிப்பான பூமி நஞ்சையே
சிராக விளையும் புஞ்சையே!
வாழை தென்னையும் மிஞ்சியே
குளம் கிணறெல்லாம் நீர் கொஞ்சுமே-முத்து
வீதியில் நெசவுத் தொழில்களை
பார்த்துப் பார்த்து மகிழ்வானே.

அடடா! அடடா! ... ... (தஞ்)

# 8. பூகோளம் IV std.

## இந்தியாவின் சில முக்கிய நகரங்கள்.

படம்: அந்தமான் கைதி] [இசை: அஞ்சு ரூபா

இந்தியாவின் முக்கிய நகரத்தில் பெரிது
கல்கத்தாவே—அது—கல்கத்தாவே (இந்)

[அநுபல்லவி]

அங்கு மக்கள் வாழுகின்றூர் இருபது லட்சம்
அழகுறும் பட்டிணம் (இந்)

[சரணம்]

மேற்கு கடற்கரை ஓரத்திலே பம்பாய்
மேலான நகரம் வியாபாரஸ்தலமே!
இந்தியாவின் தலைநகர் டில்லியே............
இதுவும் பட்டிணமே இன்னும் காசி, கொச்சியும்
சென்னையுமே சேர்ந்து பட்டிணத்தின் பட்டியல்
சுற்றிப்பாரு—பின்பு—சுற்றிப்பாரு. (இந்)

# 9. பெரியோர் வழி

படம்: பராசக்தி] [இசை: ஓ! ரசிக்கும்சீமானே!

ஓ!......படிக்கும் தம்பியே! நீ
படித்து பெரியோர் வழி
எடுத்து தினமே நடப்பாய்!—அது
மணக்கும் மலர்கள் தம்பி!
இனிக்கும் பழங்கள் தம்பி!
நினைக்கும்போதெல்லாம் அமுதே! (ஓ)

[அநுபல்லவி]

புத்தர் சொன்ன பொன்மொழியைக் கேளாய்!—இத
ஏசு, முஹம்மத் உரையைப் பாராய்!—அறிவிலுறை
ஏசு, முஹம்மத் உரையைப் பாராய்!—சீர்
நாட்ட நிலே சுதந்திரம் ஈட்டித் தந்த
காந்திஜீயின் தேட்டமிகு வழி வருவாய்—அது
மணக்கும் மலர்கள் தம்பி!
இனிக்கும் பழங்கள் தம்பி!
நினைக்கும்போதெல்லாம் அமுதே! (ஓ)

# 10. மாணவிகள் கோலாட்டம்

படம்: வாழ்க்கை] [இசை: எண்ணி எண்ணி

கற்றிச்சுற்றி ஆடி விளையாடுவோம் கோலாட்டமே
செந்தமிழைப் பாடி விளையாடுவோம் கோலாட்டமே

[அநுபல்லவி]

கற்றறிந்த நல் பெண்மணியாக
காசினிமீது வாழ்ந்திடுவோமே—நாம்
வாழ்ந்திடுவோமே (சு)

[சரணம்]

பூத்துக் குலுங்கிடும் நறுமலர் சோலையில்
பூரண சந்திரன்வரும் பொன்னிற வேளையிலே
காத்திருந்து கண்ணகி பெயர் சொல்லி ஆடுவோம்
காட்சிதரும் மாமயில்போல நடைபோடுவோம் (சு)

சட்டத்தையும் படிப்போம் பட்டங்களும் சூடுவோம்
சன்மார்க்கம் பிடிப்போம் சோறுகூட சமைப்போம்
கட்டாயம் புதுமைப்பெண்ணினத்தில் சேருவோம்
காந்திஜியின் போதனைக் கைக்கொண்டு
முன்னேறுவோம் (சு)

# 11. அ, ஆ, இ.

(ஏற்ற மெட்டில் இசைத்துப் பாடுக.)

அ ன்னை பிதா சொல்லைக் கேள்
ஆ சிரியர்க் (கு) அன்பு செய்
இ றை யை வணங்கு
ஈ க்க ளைத் துரத்து
உ ண்மை யே ஜீவன்
ஊ க்க மே நண்பன்
எ ழில் கலை ஓது
ஏ சு கதை கேளு
ஐ க்கிய மே வாழ்வு
ஒ ட்டாரம் தாழ்வு
ஓ டி விளை யாடு
ஔ வை மொழி தேடு
இஃது தமிழ்ப் பாட்டு!

# சுல்தானியா படைமருந்து.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய தேசங்களில் 37 வருடங்களாக உபயோகிக்கப்பட்டு கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து தங்கமெடல்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது.

படை, சொரி, சிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுக்கடி, புழுக்கடி, எச்சிற்றழும்பு, சேற்றுப்புண், மாட்டுப்புண், கருநிறமுள்ள தடிப்பு

முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**ஜெயரசம் டிப்போ,**
அய்யம்பேட்டை. S. Ry.
(தஞ்சை ஜில்லா.)

ணன் கல... பிரஸ், அய்யம்பேட்டை.